★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 27உ செவ்வாய் (11—9—56) ★ ★ வெளியூர் : ஆவணி 28உ புதன் (12—9—56) [இதழ் 79

## உலகிலேயே மூன்றாவது பெரிய முத்து!

வடஆஸ்திரேலியக் கடலில் முத்துக்குளிக்கும் ஜப்பானிய முத்துக்குளிப்பவர்களின் தலைவர், உலகிலேயே மூன்றாவது பெரிய முத்து ஒன்றைக் கண்டெடுத்திருக்கிறார்!

அந்த முத்து, வெள்ளி 4-அணா நாணய அளவில் மிகப் பெரியதாக இருந்ததென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மிக அழகான வர்ணங்களுடன் அம்முத்து காணப்படுகிறதாம்; உலக மார்க்கெட்டுகளில் அது இன்றைய நிலையில் ஆயிரக்கணக்கான பவுன் விலை மதிப்புப்பெறும் என்றும் கூறப்படுகிறது!

# கப்பலோட்டிய வீரத் தமிழன் வ.உ.சி.கோரிய சுதந்திரம் எங்கே?

## காங்கிரஸ் பேரால் ஆட்சி நடத்தும் காமராசர்களே, பதில் கூறுக!

### வ.உ.சி. மன்ற ஆண்டுவிழாவில் அண்ணா

### என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., டி. சண்முகம் எம்.எல்.ஏ., சத்தியவாணிமுத்து முழக்கம்

### செங்குன்றம் மக்களின் எழுச்சி

சென்னை, செப். 11—

செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) ஊராண்மைக் கழகச் சார்பில் நேற்று மாலை 5 மணிக்கு அண்ணா அவர்களுக்கு மகத்தானதோர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாலை 6-30 மணிக்கு செங்குன்றம் அடுத்த கிராண்ட் லைன் வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டு விழாவும் சிறப்புற நடந்தேறியது.

இந்நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., டி. சண்முகம் எம். எல். ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

செங்குன்றம் நகரிலும் அதனையடுத்த சுற்றுப்புறக் கிராமங்களிலும் தெருக்களிளெல்லாம் தோரணங்களாலும், வளைவுகளாலும், கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

சென்னையை அடுத்த ரெட்ஹில்ஸ் நெடுஞ்சாலையிலுள்ள மாதவரத்திலிருந்து செங்குன்றம் வரையும் (சுமார் 6 மைல்) வழி நெடுக ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்கள், 'அருமைத் தலைவர் அண்ணா அவர்களே! முன்னணி வீரர்களே! வருக வருக!' என்று பொறிக்கப்பட்ட வளைவுகளில் அலங்கரித்திருந்தனர்.

குறிப்பாக கிராண்ட் லைன் வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டு விழா ஏறத்தாழ ஒரு வட்ட மாநாட்டினைப் போலவே காட்சியளித்தது.

ஆண்டு விழா பந்தல் முகப்பில் தி. மு. கழகத் தேர்தல் சின்னமாய்த் தேர்ந்தெடுத்திருக்கும் உதய சூரியன் ஒளிவிட்டுக் கொண்டிருந்தான். கப்பலோட்டிய தமிழ் வீரர் வ. உ. சிதம்பரனார் நம் மெதிரே தலைநிமிர்ந்து நிற்கச் செய்வதுபோலவும் அப்பந்தலின் அமைப்பு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

செங்குன்றம் போகும் வழியில் மாதவரம், புழல், வடகரை தி. மு. கழகக் கிளையினர் கழக அலுவலகத்தின் அருகில் கொடிகளை ஏற்றிவைத்து, அண்ணா அவர்களையும் மற்ற தோழர்களையும் அன்புடன் வரவேற்கக் காத்திருந்தனர். அண்ணா அவர்களின் காரைக் கண்டதும் அவர்கள் எழுப்பிய இலட்சிய ஒலி முழக்கம் விண்ணைதிரச் செய்தது. அந்தக் காட்சி தோழர்களின் ஆர்வத்தையும் உறுதிப்பாட்டையும் எடுத்துக் காட்டினது.

இக்கிளைகளின் சார்பில் அண்ணா அவர்களை ஆங்காங்கு சிறிது நேரம் இருக்கச்செய்து மலர் மாலைகளையும், கைத்தறி ஆடைகளையும் தலைவர்களுக்கு அணிவித்து தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

#### மாபெரும் ஊர்வலம்

மாலை 6 மணிக்கு செங்குன்றம் பாலத்திற்கருகிலிருந்து அண்ணா அவர்களை திறந்த காரில், ஊராண்மைக் கழகத் தலைவரும் உறுப்பினர்களும் ஆயிரக்கணக்கான பொது மக்களும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். உடற் பயிற்சி விளையாட்டுகளையும் தோழர்கள் ஊர்வலத்தின்போது நடத்தினர். இவ்வூர்வலம் செங்குன்றம் வரலாற்றிலேயே ஓர் புதுமையாக இருந்ததெனப் பேசி பொது மக்கள் பூரித்தனர்.

#### ஊராண்மைக் கழக வரவேற்பு

மாலை 6-15 மணிக்கு செங்குன்றம் ஊராண்மைக் கழகச் சார்பில், பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட அழகிய மேடையில், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஊராண்மைக் கழகத் தலைவர், உறுப்பினர்களை அண்ணா அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அடுத்து, துணைத்தலைவர் தோழர் சுந்தரமூர்த்தி ஊராண்மைக் கழக வரவேற்பை அண்ணா அவர்களுக்கு வாசித்தளித்து, மலர் மாலைகளையும், கைத்தறி ஆடைகளையும் அணிவித்தார்.

அண்ணா அவர்களுடன் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., டி. சண்முகம் எம். எல். ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோருக்கும் மலர்மாலைகள், கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் செங்குன்றம் ஊராண்மைக் கழக வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

அடுத்து, ஊராண்மைக் கழக அலுவலகத்தில் தேநீர் விருந்து நடைபெற்றது.

#### வ. உ. சி. மன்ற ஆண்டு விழா

பின்னர், செங்குன்றம் அடுத்த கிராண்ட் லயனிலுள்ள வ. உ. சி. மன்ற நான்காம் ஆண்டு விழாவுக்குத் தோழர்களுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## 300 ஆயுர்வேதக் கல்லூரி மாணவர்கள் 20 நாட்களாக வேலைநிறுத்தம்

### கல்லூரியை அபிவிருத்தி செய்யக் கோரி உண்ணாவிரதம்

மைசூர், செப். 10—

கடந்த ஆக. 20-ந்தேதி முதல் வேலைநிறுத்தம் செய்துவரும் சர்க்கார் ஆயுர்வேத—யுனானி கல்லூரியைச் சேர்ந்த 300 மாணவர்கள் இப்போது உண்ணாநோன்பு மேற்கொண்டுள்ளனராம்.

எல்லா வகையிலும் கல்லூரியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது அவர்கள் கோரிக்கையாகும்.

பெண்கள் உள்பட அம்மாணவர்கள், நேற்றுமுதல் அக்கல்லூரியின் வாயிலில் உட்கார்ந்து மறியல் நடத்தி வருகின்றனர்; அங்கு போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனராம்.

இன்று ஆரம்பமாக இருந்த பரீட்சைகள், காலவரையறையின்றி ஒத்திபோடப்பட்டிருக்கின்றன.

## வினோபாவை ஏமாற்ற முடியாது!

### கூடக்குலவுவோரின் குட்டு உடைபடுகிறது

### பூதான வேடம்! ஓட்டு பெறுவதே பிரதானம்!

#### குறள் பாடம் காட்டிக் குத்துகிறார்

5—9—56 மாலை கூளூரிலிருந்து புலவக்காணிபாளையத்திற்கு வினோபா பாவே அவர்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். திருக்குறள் நன்றாய் அறிந்த அன்பர் ஒருவரை தோழர் ச. செகநாதன் வினோபா பாவேக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்...' என்று ஆரம்பிக்கும் குறளைக் கூறி உதாரணம் காட்டுமாறு அவரிடம் பாவே கேட்டார்.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற முழுச் செய்யுளையும்கூறி, கீழ்க்கண்டவாறு அதற்கு உதாரணம் தந்தார் :—

'சிற்பியொருவன் கல்லில் நாயின் சிலை ஒன்று அழகாகச் செதுக்கி வைத்திருக்கிறான். தூரத்திலிருந்து பார்த்தால் அசல் நாய் போலவே காட்சியளிக்கிறது; ஆனால்,உண்மையில் அது கல்லா, நாயா என்று கண்டு கொள்வதுதான் அறிவு.'

இவ்வுதாரணத்தால் திருப்தியடையாத பாவே, 'நான் ஒரு உதாரணம் கொடுக்கிறேன் பாருங்கள்' என்று கூறி, கீழ்க்கண்டவாறு கொடுத்தார் :—

'ஒரு எம். எல். ஏ. - இருக்கிறார்; அவருடைய தொகுதியில் பாவே யாத்திரை செய்கிறார்; அந்த எம். எல். ஏ.-வும் பாவேயுடன் யாத்திரையில் கலந்துகொள்கிறார்; பார்த்தால், நிலதானத்தில் மிகுந்த அக்கறையுள்ள தயாளுவான ஊழியராகக் காட்சியளிக்கிறார்; ஆனால் உண்மையில் தனது எம். எல். ஏ. இடத்தை அந்தத் தொகுதியில் நிலைப்படுத்துவதற்காகவே பாவேயுடன் வருகிறார்; இதுதான் மெய்ப்பொருள். இதனைக் கண்டு கொள்வதுதான் அறிவு,' என்று கூடியிருந்தவர்களின் சிரிப்பிற்கிடையே கூறினார்.

'இப்படிச் சொல்வீரா, இதை விட்டு சிற்பி என்று ஆரம்பித்து வேதாந்தத்தைக் கூறுகிறீரே?' என்று மேலும் பாவே அவர்கள் சொன்னபோது, அனைவரும் அவரது குறள் அறிவையும் உண்மையைத் தயவாது கூறும் துணிச்சலையும் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர்.

## தேர்தல் நிதிக்காக சிறப்புக் கூட்டம்

### பொதுச்செயலாளர் வழங்கிய 'இலக்கிய இன்பம்'

சென்னை, செப் 10—

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் நிதிக்காக தலைமைக் கழகத்தின் சார்பில், 8—9—56 மாலை 6 மணியளவில், சென்னை கோகலே மண்டபத்தில் ஓர் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது

கூட்டத்திற்கு ஒரு ரூபாய் எட்டணா நன்கொடை செலுத்தி ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

துவக்கத்தில் தோழர் பார்த்தசாரதி, தோழியர் ஜி கஸ்தூரி ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடினர்.

தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் முன்மொழிய, தோழர் இளவரசு வழிமொழிய தோழர் கே. ஏ. மதியழகன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தி. மு கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'இலக்கிய இன்பம்' என்னும் பொருள் குறித்து அரியதோர் சிறப்புச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகவிலலுடன் கூட்டம் முடிவுற்றது. (ந, தி.)

## ரூ. 5 கோடி செலவில்!

### இரயில்வே ஊழியர்களுக்கு மருத்துவ வசதிகள்?

இந்திய இரயில்வே நிர்வாகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

[illegible] ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—9—'56 செவ்வாய்

# அரசியல் விந்தை!

"எதை வேண்டுமானாலும் சொல்லுவது சுலபம்; ஆனால் சொல்லியதை செயலாற்றுவது கடினம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் காணப்பெறும் கிராம அபிவிருத்தி ஏற்பாடுகளைவிடச் சிறப்பான ஒரு ஏற்பாட்டை திரு. அண்ணுதுரை தருவாரானால், எனது நிதி அமைச்சர் பதவியைத் துறந்துவிட நான் தயாராக இருக்கிறேன்."

இவ்வாறு திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டமொன்றில் சென்னை நிதி அமைச்சர் அறைகூவல்விட்டிருக்கிறார். அவரே குறிப்பிட்டுள்ளதுபோல் ஏதோ சுலபமான சொல்லளவிலாவது தமது நிதி அமைச்சர் பதவியைத் துறந்துவிடுவதாக அவர் கூறியதுகண்டு நாம் மகிழ்கிறோம்.

அவர் விட்ட அறைகூவலை நாம் வரவேற்கின்றோம். அதே நேரத்தில் அவருக்கு ஒரு நிபந்தனையையும் நாம் விதிக்கிறோம்.

பொதுக் கூட்டத்தில் வெளிப்படையாக அவர் கோரியுள்ளதுபோன்று, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி ஏற்பாட்டிலும் சிறந்த ஒரு ஏற்பாட்டை நாம் அளிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அவ்வாறு தரப்படும் ஏற்பாட்டை அட்சரம் விடாமல் அப்படியே செயலாற்ற அவர் முற்படுவாரா—அதற்கான வாக்குறுதியைத் தர அவர் தயார்தானா என்பது முன்கூட்டித் தெரிந்தாகவேண்டும்.

நாம் அளிக்கக்கூடிய திட்டத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கும் ஒதுக்கித் தள்ளுவதற்கும், நிதி அமைச்சருக்கு உரிமை இருக்கிறதா என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். அத்தகு உரிமையை அவர்எப்பொழுது முதல் பெற்றிருக்கின்றார் என்பதையும் அவர் திட்டவட்டமாகக் கூறியாக வேண்டும்.

நாம் தரக்கூடியத் திட்டத்தை ஒப்பிச் செயலாற்ற முந்துவது பற்றித்தான் நமக்குள்ள கவலையே அல்லாது, அவர் பதவியைத் துறந்து மிக இலகுவாகத் 'தியாகி'யாகிவிட எண்ணுவது பற்றி நமக்குக் கடுகளவு கவலையும் கிடையாது எனவே, பதவியைத் துறந்து தமக்கு மான உணர்ச்சி உண்டு என்பதை மக்களுக்கு மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய வாய்ப்பு நேர்ந்த காலத்தில் எல்லாம், பதவியை உடும்புபோல் பிடித்துக் கொண்டிருந்த இவர், இப்பொழுது பதவியைவிட்டு வெளியேறிவிடத் தயார் எனக் கூறுவதில் பொருளே இல்லை. அதிலும் இன்னும் ஐந்தாறு திங்களில் தானுக் காலத்தால் கத்தரித்துக் கொள்ள இருக்கின்ற ஒரு அமைச்சர் பதவிக்கு இவ்வளவு சிறப்புக் காட்டி இவர் பேசுவது வெறும் கேலிக் கூத்தாகும்.

ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்தை கல்வி அமைச்சர் என்ற முறையில் பலபடப் புகழ்ந்து செயலற்ற முன்வந்தவர் இந்த நிதி அமைச்சர்தான். இவரேதான் பின்னர் விளக்கெண்ணெய் அருந்தினவர்போல், அத்திட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

திட்டத்தைத் திரும்பப் பெற்ற நேரத்தில், பதவியைத் துறப்பதற்கு இவருக்கு வாய்ப்பு உண்டாயிற்று. ஆனால் அப்பொழுதோ குறிக்கோளைவிடப் பதவி பெரிதென மதித்து இக்குணவான் நடந்துகொண்டார்.

தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழர்களுக்குத்தான் சொந்தமென இவர் சட்டசபையில் வாதிட்டது பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கதாகும். இதே அமைச்சர்தான் டில்லியிலிருந்து அறை கிடைத்ததும், சில நாட்களுக்கு முன் சட்டசபையில் தாம கூறிய வாதத்தையே மறுத்து வாதிட முன்வந்தார். அந்த மானக்கேட்டிற்கும் கற்சிலை எழுப்பி, நமது சந்ததியினருக்கு உணர்த்த வேண்டும்.

தமிழ் மக்கள் நலனில் தமக்குள்ள பற்றைக் காட்டிக் கொள்ளுவதற்குக்கூடப் பதவியைவிட்டு வெளியேற வேண்டிய ஒரு அரிய வாய்ப்பு அப்பொழுது இவருக்கு ஏற்பட்டது. அந்தச் சோதனையிலும் இவர் கடைந்தெடுத்த பதவிப் பித்தராகவே காட்சி அளித்தார்.

மக்கள் எண்ணிக்கைக்கேற்ப இரண்டாவது திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியை டில்லி அரசாங்கத்திடமிருந்து போர் தொடுத்துப் பெறப்போவதாக, சட்டசபையில் வீரமுழக்கம் செய்தார் இந்த நிதி அமைச்சர். அதற்காக சட்டசபை உறுப்பினர் அனைவரும் கருத்துவேற்றுமை இல்லாமல், புலிக்கு பயந்தவர்கள் தன் மேல் படுத்துக் கொள்ளவேண்டும் என வேண்டிக்கொண்ட கோமாளியைப்போல், தாம் தொடுக்க இருக்கும் போருக்குத் துணை புரிய வேண்டும் என மன்றாடினார். இந்தத் துறையிலும், மற்றத் துறைகளில் செய்தது போன்றே வழக்கமாக ஏமாற்றம் ஏற்பட்டதும், பதவியைத் துறப்பதற்குப் பதில், பதவியை பற்றிக்கொண்டு கிடந்துவிட்டார்.

'மானம் கெட்டாலும் பதவி இருந்தால் போதும்' என்ற ஒன்றை மட்டுமே தனது அமைச்சர் வாழ்க்கை உள்ளடக்கமாகக் கொண்டு வாழ்ந்து வரும் இவர், இப்பொழுது நிதி அமைச்சர் பதவியைத் துறந்துவிடப் போவதாகக் கொக்கரிப்பது முதல்தரமான நகைச்சுவை விருந்தாகும். எனவே விளையாட்டிற்காகவாவது சுலபமான சொல்லலங்காரமாகப் பதவியைத் துறந்து விடுவதாகக் கூறுகிறீர்; அதனால் பலனுமில்லை—அதை நம்ப நாட்டில் மக்களும் இல்லை என்பதை நிதி அமைச்சருக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறோம்.

இரண்டாவது திட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி ஏற்பாட்டிலும் சிறந்த ஒரு ஏற்பாட்டை நாம் தரவேண்டும் என நிதி அமைச்சர் கூறியிருப்பதும், நமது கழகம், இதுவரை முதல்-இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் குறித்து நாம் கூறிவந்தக் குற்றச்சாட்டைப் பிரதிபலிப்பதாக இல்லை. நமது குற்றச் சாட்டின் அடிப்படையை மறைத்தும் திருத்தியும் பொதுமக்களுக்குக் காட்ட முயலும் ஒரு பித்தலாட்ட முறையாகவே, நிதி அமைச்சரின் கூற்றும் அமைந்திருக்கிறது.

இரண்டு திட்டங்களிலும் பொதுவாகத் தென்னாடும்—குறிப்பாகத் தமிழ் நாடும் அலட்சியப்படுத்தப்பட்டு இருக்கிறது. தொழில்துறையில் வடநாட்டிற்கு அளவுக்கதிகமான சலுகையும தென்னாட்டிற்கு அலட்சியமும் காட்டப்பட்டிருக்கிறது என நாம் குற்றஞ்சாட்டி வந்திருக்கிறோம். இக்குற்றச்சாட்டை மெய்ப்பிப்பதற்கான ஆதாரங்களையும் தக்கப் புள்ளி விவரங்களுடன் நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம்.

இவ்வாறு நாம் இதுவரை கூறி வந்துள்ள குற்றச்சாட்டை, நாணயமானவராக இருந்தால், நிதி அமைச்சர் மறுத்திருக்க வேண்டும். அதை விடுத்து, இரண்டாவது திட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தித் திட்டத்தைக் குறித்து நாம் ஏதோ குறைகூறினது போலவும், அவ்வாறு குறைகூறுகிறவர்கள் வேறு ஒரு சிறந்த ஏற்பாட்டைத் தந்தால், மந்திரிப் பதவியைவிட்டே ஓடிவிடத் தயாராக இருப்பது போலவும் நிதி அமைச்சர் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு நாம் குறிப்பிடுவதினால் இரண்டாவது திட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி ஏற்பாடு, மிகமிக உயர்ந்தது—குறைகளே இல்லாதது என நாம் கருதிக்கொண்டு இருப்பதாகப் பொருள் பட்டுவிடாது. நாம் இதுவரை அதுபற்றிச் சிந்திக்கவில்லை என்பதை வலியுறுத்தத்தான் அதனை நாம் குறிப்பிட்டோம்.

உலகத்திலேயே எவராலும் தீட்ட முடியாத ஒரு திட்டத்தைத் தீட்டிவிட்டதுபோல நம்பிக்கொண்டு, இதுபோல் ஒரு திட்டத்தை மற்றவரால் தீட்ட முடியவே முடியாது என நிதி அமைச்சர் அறைகூவுவது, அவருடைய தலைக்கனத்தையே காட்டுவதாக இருக்கிறது. அதுவுமன்றி, மக்களின் நல்வாழ்விற்குத் திட்டம் தீட்டத் தெரிந்தவர்கள் தம் கட்சியைத் தவிர்த்து வேறு எங்கும் இல்லை என நிதி அமைச்சர் எண்ணிக் கிடப்பது, நிதி அமைச்சரின் பொருளாதார அறிவின்மையையே காட்டுவதுமாகும்.

நாம் திட்டம தந்தால் இவர் பதவியை விட்டு வெளியேறத் தயாராம்! நாம் திட்டம் தருவதற்குத் தமது பதவி துறப்பதை ஏன் இந்த நிதி அமைச்சர் நிபந்தனையாக்குகிறார்! திட்டம் தருவதையும் பதவி துறப்பையும், இவர் இணைத்துப் பேசி இருப்பது அரசியல் விந்தையாக இருக்கிறது!

## மீண்டும் 'நவகாளி?'

'மதத் தலைவர்கள்' என்ற தலைப்பில் பாரதீய வித்தியா பவனத்தார் வெளியிட்ட புத்தக வெளியீடுகளை ஆட்சேபித்து, ஒராய் என்ற ஊரில் நடைபெற்றக் கலவரம் ஒன்றின் போது, 6 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 14 பேர் காயம்பட்டனர் என்றும் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன.

# வடநாட்டு இந்தி வெறியர்கள் ஓலம்

## ஆங்கிலம் பற்றிய கல்வி மந்திரிகள் முடிவு அரசியல் சட்டத்திற்கு முரணானதாம்!

புதுடில்லி, செப். 9—

'ஆங்கிலம் பல்கலைக் கழகங்களில் போதனு மொழியாகவும், இடைநிலைப் பள்ளிகளில் கட்டாய பாடமாகவும் இருக்க வேண்டும்' என்று மாநிலக் கல்வி மந்திரிகள் மாநாடு செய்துள்ள முடிவுக்கு எதிராக இந்தி வெறியர்கள் கச்சைகட்டுகின்றனர் என்று கூறப்படுகிறது.

மக்கள் சபை இந்தி சங்கத்தின் செயற்குழு இன்று கூடியபோது, 'இந்த முடிவு அரசியல் சட்டத்திற்கு விரோதமானது; நாட்டிற்குப் பெரும் தீங்கு விளைவிப்பது' என்று ஓலமிட்டிருக்கின்றனர்.

'இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகளை அலட்சியப்படுத்திவிட்டு, இந்தியின் நிலை பற்றிய இந்தப் புதிய திட்டம் அரசியல் சட்டத்திற்கு முரணானது—அநியாயமானது' என்றும் அவர்கள் கூச்சலிட்டிருக்கின்றனர்!

ஆங்கிலம் பயிலுவதற்கு வசதி செய்யவேண்டியது நியாயம் தானும்; ஆனால், அதனை இடைநிலைப் பள்ளிகளில் கட்டாய பாடமாகவும், பல்கலைக் கழகங்களில் போதனு மொழியாகவும் ஏற்றுக் கொள்வது கூடாதாம்! இவ்வாறு கூறியிருக்கின்றனர், இந்தி வெறியர்கள்!

"நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகும்; இளம் தலைமுறையினரின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும்" என்றும், அவர்கள், முடிவு குறித்து ஓலமிட்டிருக்கின்றனர்!

# அபிவிருத்தி வேலைகளை அமுல் நடத்த!

## மத்திய சர்க்கார் நிதி உதவி

### சென்னைக்கு ரூ. 49½ இலட்சம் ஒதுக்கியிருக்கிறதாம்

புதுடில்லி, செப். 6—

நடைமுதல் ஆண்டில் ஆக்காங்குள்ள அபிவிருத்தி வேலைகளை அமுல் நடத்தத் திட்டக் குழுவை மத்திய சர்க்கார் கலந்தாலோசித்து மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்கார் நிதி ஒதுக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

டில்லிக்கு ரூ 2,35,000-மும், சென்னைக்கு ரூ 49,45,000-மும், ஆந்திரத்திற்கு ரூ 25,35,000-மும் பம்பாய்க்கு ரூ 49,75,000-மும் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தொகை, தேசீய விரிவு படுத்தும் திட்டங்கள் பரவியும் பயன் பெருத இடங்களின் நன்மைக்காகக் கிராம சமுதாயத் திட்டத்தை ஆரம்பிக்கப் பயன் பெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இம்மாநிலங்களைத் தவிர, ஐதராபாத்திற்கு ரூ. 25 80,000; தி. கொ - விற்கு ரூ. 12 80,000; புதுச்சேரிக்கு ரூ 50,00,000-மும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சேர்த்து மொத்தமாக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

# '40 மணி நேரமே வேலை செய்வோம்'

பிரிட்டிஷ் வர்த்தகத் தொழிற் சங்கக் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைவரும் தங்கள் தலைவர்கள் கூறின கருத்துக்களை ஏற்க மறுத்து, வாரத்திற்கு 40 மணி நேர வேலைதான் செய்வது என்று தீர்மானித்திருக்கின்றனர்.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 42,09,000 வாக்குகளும், எதிராக 36,83 000 வாக்குகளும் கிடைக்கப்பெற்றனவாம்.

## கூறுவதைக் கேளீர்!

புதுடில்லி, செப். 8—

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களுக்காகக் குடிதண்ணீர்க் கிணறுகள் தோண்டுவதுபோன்ற காரியங்களுக்காகத்திட்டவேலைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறதென்றும், அத்தகைய கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 8,96,000 ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் மக்கள் சபையில், அமைச்சர் தத்தார் கூறியுள்ளார்.

# 'தமிழ் மொழியிலேயே பரீட்சை நடத்துக'

## 'போதனு மொழியாகவும் தமிழ் மொழியே இருக்கவேண்டும்'

### மலாயா தமிழர் தீர்மானம்

கோலாலம்பூர், செப். 9—

இந்திய மாணவர்கள், தங்கள் பரீட்சைகளை தங்களது தாய் மொழியிலேயே எழுத அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரி இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மலாயா சர்க்காரின் கல்வி இலாகா, எதிர்காலத்தில் மலாய, ஆங்கில மொழிகளில் மட்டுமே பரீட்சை நடத்துவது என்றுதிட்டமிட்டுவருவதை எதிர்க்க மலேயா தமிழ்ப் பண்ணை நடத்திய கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியதாம்.

'இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் மொழியும் கட்டாய பாடமாக அமைய வேண்டும்' என்றும், 'துவக்க இடைநிலைப் பள்ளிகளில் போதனு மொழியாகத் தமிழே இருக்க வேண்டும்' என்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# 'தமிழரையும் மதிக்கவேண்டும்'

## நாகர்கோயில் தபால் ஊழியர்கள் கோரிக்கை

வில்லுக்குறி, செப். 10—

"இந்தியத் 'தபால் தலை'களில், காந்தியார், திலகர் முதலிய தலைவர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பதுபோல், தமிழ் மறை தந்த திருவள்ளுவர், விடுதலை இயக்கத்திற்கு தமிழ் நாட்டில் வித்திட்ட கட்டபொம்மன் ஆகியோரது திருவுருவங்களும் பொறிக்கப்பட வேண்டும்" என்று, சமீபத்தில் இங்கு நடைபெற்ற அ. இ. தபால் ஊழியர்கள் சங்க நாகர்கோயில் கிளைக் குழுவின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

# பொதுவாழ்வுத் துறையில் நிலவும் சீர்கேடுகள்!

## அகற்றுவதற்கு தாராசிங் யோசனை

சென்னை, செப். 9—

நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள்—குறிப்பாகப் பொது வாழ்வுத் துறையில் இருந்துவரும் குற்றங்கள், வகுப்புத் துவேஷம் ஆகியவற்றை நீக்க, நாட்டிலுள்ள எல்லா கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி ஆராயவேண்டுமென்று அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் கூறியிருக்கிறார்.

"இன்றைய நாட்களில் நாட்டில் நிலவிவரும் ஊழல்கள் மிக மலிந்து கேடு விளைவிக்கின்றன; மக்களுடைய உயிர்நாடியையே வகுப்புத் துவேஷம் பாழ்செய்கிறது," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# 'வள்ளுவரின் அறவாழ்க்கையே தமிழரின் வாழ்முறையாகும்'

## 'குறளை மிஞ்சும் நூல் வேறேதும் இல்லை'

"வள்ளுவப் பெருந்தகை, வையத்தார் உள்ளம் மகிழ நுண்பொருளைக் குறளடியால் அளந்தார். பரப்பொருளை அளத்தல் எளிது; ஆனால் நுண்பொருளை அளப்பதுதான் அருமையினும் அருமை. பரப் பொருளையே திருமால் அளந்ததாகக் கூறப்படும் கதையில் வரும் மால், உலகை நயந்து அளந்தார்; ஆனால் திருவள்ளுவரோ மக்கள் உள்ளத்தை ஓர்ந்து அளந்திருக்கிறார். எனவே, பரப் பொருளை அளந்ததாகக் கூறப்படும் மாலைவிட திருவள்ளுவர் மிஞ்சி நின்றும் பெருமையுடைய புலவராகத் திகழ்கின்றார்.

"திருக்குறளைக் கொண்டுத் தமிழகத்தின் வரலாற்றை நோக்குங்கால், வள்ளுவர் வாழ்ந்த காலம் பொற்காலமாக இருக்கவில்லை; அக்காலம் பொற்காலமாக இருந்திருந்தால் பல கொள்கைகளை மறுத்துத் தூய தமிழர்களின் கொள்கையை நிலைநாட்டவேண்டிய அவசியமே குறளில் ஏற்பட்டிருக்காது. அக்காலத்திலும் பல நாட்டினரின் படையெடுப்புகள், சமயப்பூசல்கள், மொழித் தாக்குதல் போன்றவை நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இத்தனை எதிர்ப்புகளுக்கும் குறள் தப்பித்து உயிர்பெற்று ஒளிர்வதற்குக் காரணம், அது, 'ஒரு வள்ளுவ'ரால் ஆக்கப்பட்டதேயாகும்,"

என்று மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. நா. பாலுசாமி அவர்கள், புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் கடந்த 26ந் தேதியன்று நடைபெற்ற இலக்கியக் கூட்டமொன்றில், 'ஒரு வள்ளுவர்' எனும் தலைப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கூட்டத் துவக்கத்தில், தோழர் முத்து சம்பந்தன் அவர்கள் 'மணிமேகலை காட்டும் மாண்பு' எனுந் தலைப்பில் சிறிதுநேரம் உரையாற்றினார்.

மேலும், தொடர்ந்து திரு. பாலுசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:—

'நமது நாட்டில் புலவர்களைப் பற்றிய சரியான வரலாறு இல்லை. அதன் காரணமாக அவர்களைப் பற்றியக் கற்பனைக் கதைகள் பல எழுந்துவிட்டன. வள்ளுவரைப் பற்றி வழங்கிவரும் கதைகளும் இப்படிப்பட்டவைகளே. வள்ளுவர் எழுதிய நூலைக் கொண்டுதான் அவர் வரலாற்றையும் அறியவேண்டும். வள்ளுவருக்கு இணை அவரேயாவார். திருக்குறள் போன்ற ஒரு வாழ்வு நூல் வேறு எவராலும் எழுதப்பட்டதில்லை. உலகில் புலவர் பலர் இருக்கலாம். ஆனால், 'புலவர்' எனுஞ் சொல்லுக்கு வள்ளுவர் ஒருவரே பொருத்தமுடையவராவார். மேலும் அன்று முதல் இன்றுவரை எழுந்த நூல்கள் அனைத்தும் வள்ளுவர் கருத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்து சிறப்புடையனவாகத் திகழ்கின்றனவே அல்லாது, அதை மிஞ்சக்கூடியவை ஒன்றுமில்லை. 'தனி நூல்' எனத் தகும் திருவள்ளுவமாலை போன்ற சாற்றுக் கவிகள் கொண்ட சிறப்புடைய நூல் வேறெந்த நூலுக்கும் கிடையாது.

"திருக்குறளில் காணப் பெறும் 'காமம்' என்ற சொல்லையே வெறுத்தவர்கள் பலர்; காமம் என்றால் பேய் என்றும் நோய் என்றும் பலர் நம்பியிருந்தனர்; காமம் என்பது பேயுமல்ல—நோயுமல்ல — அணங்குமல்ல; காமம்—நிறைந்த அன்பேயாகும். இல்லறம் வேறு—துறவறம் வேறு; இல்லறத்தில் அன்பும், துறவறத்தில் அருளும் அரசோச்சும்; வள்ளுவரின் துறவறமும் சமணரின் துறவறமும் வேறுபட்டவை. நரை, திரை, மூப்பு; இவைகட்கு அஞ்சி, இளமையிலேயே துறவறத்தை மேற்கொள்ள வேண்டுமென்பது சமணரின் துறவறக் கொள்கை; ஆனால் வள்ளுவர், இல்லறத்தை அன்புடன் நடத்தி, வாழ்வாங்கு வாழ்ந்து அருள் உள்ளம் பெறுவதையே துறவறம் என்கிறார். 'இல்லறம் இன்றித் துறவறம் இல்லை'—என்பதே வள்ளுவரின் அசையாக் கொள்கையாகும். இதுவே தமிழரின் கொள்கையும் ஆகும்."

இவ்வாறு குறிப்பிட்ட அவர், மேலும், அமைச்சர்கள் பயனுள்ள ஒரு வினையைக் கொண்டு பயனளிக்கும் பல வினைகளை ஆக்கிக் கொள்ளும் திறன் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும், இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே உலகில் பல நாடுகளில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்றும், இதை அக்காலத்தே தெரிவித்தவர் வள்ளுவப் பெருந்தகை ஒருவரே என்றும், குடியாட்சியிலிருக்கும் அமைச்சர்கள் இத்தகுத் திறனுடைத்தோராயிருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

# கழகச் செய்திகள்

★

## புள்ளம்பாடியில் பொதுச்செயலாளர்

### தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்

5—9—56 மாலை 6 மணிக்கு, புள்ளம்பாடி கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஆ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் அன்பில்-தர்மலிங்கம், மற்றும் பல தோழர்கள் கழகக்கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இறுதியில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆட்சியாளர்களின் திறமையற்றப் போக்கினையும், கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டிய அவசியத்தையும் விளக்கிப் பேசினார்.

## ஆமதாபாத் தி. மு. கழக மத்தியக் குழு

30—8—56 காலை 10-30 மணியளவில், சமால்பூர் கழகப்பணிமனையில் தோழர் இரா. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றபோது, கழக ஆண்டு விழாவை நவம்பர் திங்கள் முதல் வாரத்தில் 2, 3, 4-ந் தேதிகளில் நடத்துமாறு விழாக் குழுவினரைக் கேட்டுக்கொண்டும், ஆமதாபாத்தில் உள்ள தி. மு. கழகக் கிளைகளின் கூட்டு அமைப்புக்குத் தலைமையாக இதுவரை இயங்கிவந்த ஆமதாபாத் நகர தி. மு. கழகம் 'ஆமதாபாத் மாவட்டம்' எனக் கருதப்படுவதால், நகரக் கழகத்தை 'மத்தியக் கழக'மாக மாற்றியமைத்தும் முடிவுகள் செய்யப்பட்டதுடன், தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

## பொரளை (இலங்கை) தி. மு. கழகம்

25—8—56ல் பேஸ்லையன் வீதி எண். 66/8 கழகப் பணி மனையில், தோழர் வே. கா. திராவிட மணி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில் துணைச் செயலாளராகத் தோழர் வே. கா திராவிட மணி தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 30—9—56ல் கிளைக் கழக ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றச் சார்பில் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் சொற்பயிற்சிக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# செய்திச் சுருள்

★

## அகில தமிழ் நாடு ஓமியோபதி மருத்துவ சங்கம்

### 100 நோயாளிகளுக்கு இலவசச் சிகிச்சை

அகில தமிழ் நாடு ஓமியோபதி மருத்துவ சங்கம் (வட பிராந்தியம்) ஏற்கனவே, அறிவித்திருந்தபடி மேற்படி சங்கத்தின் சார்பில் டாக்டர்கள் என். சிவானந்தம், பி. கே. சேகரன், எம். வரதராசன், ஏ. ஜே. சந்திரன், எஸ். செல்வராசு ஆகியோர் திருநீர்மலை கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள பலவித நோய்களால் பீடிக்கப்பட்ட 110-பிணியாளர்களுக்கு ஓமியோபதி மருந்து, இஞ்செக்ஷன் மூலம் இலவசச் சிகிச்சை அளித்தார்கள்.

## சென்னிமலை திரு. வி. க. மன்றம் அமைப்பு

26-8-56ல், தோழர் சுகாதன் கடையில் திரு. வி. க. மன்றம் ஏற்படுத்தப்பட்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: தமிழ்மொழி; துணைத் தலைவர்: சு. தங்கமுத்து; பொருளாளர்: சி. எஸ் அலாவுதீன்; செயலாளர்: பி. பாலசுப்ரமணியம்; துணைச் செயலாளர்: எ. கந்தசாமி.

## மூதலூர் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

3—9—56 மாலை, நெல்லை மாவட்டம் மூதலூர் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் தோழர் யோ. விக்டர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அ. செயசிங், ஜான் டேவிட் ஆகியோர் மறுமலர்ச்சி மன்ற நோக்கம் பற்றிப் பேசினர்; இறுதியில், மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் இலங்கைத் தமிழர் நிலை குறித்துச் சொற்பொழிவாற்றினார். கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பொள்ளாச்சி அழகிரி நினைவு நாடக மன்றம்

24—8—56 இரவு, மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டம் தோழர் கி. சேரமணி தலைமையில் நடைபெற்றது. செப்டம்பர் 17-ல், 'மின்னொளி' என்ற பிரச்சார நாடகத்தை நடத்துவதெனவும், இந்திய சர்க்கார் வெளிநாடுகளுக்கு அனுப்பும் கலாச்சாரக் குழுக்களில் தென்னாட்டுக் கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தும், சினிமா நடிகர்—நடிகைகளைப் பற்றி ஆபாசமாகவும் அவதூறாகவும் எழுதி வரும் பத்திரிக்கைகளைத் தடைசெய்யும்படி சர்க்காரையும், இதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி தென்னிந்திய நடிகர் சங்கத்தையும் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மதுரை பகுத்தறிவு படிப்பகம்

2—9—56 இரவு 11 மணிக்கு, மேற்படி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் இராமையா தலைமையில் நடைபெற்றது. தோழர் கி. மனோகரன் தந்தையார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், திராவிட நாடு பிரிவினை நாளை சிறப்பாகக் கொண்டாட நிதிவசூல் செய்யத் தோழர்கள் நா. மணி, இராமானுசம், போ. பொன்னு, இராமையா, சின்னகிருட்டிணன், ஆர். எஸ் இராசன் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தும் தோழர்கள் எம். எஸ். மணி, ஆர். எஸ். இராசன், இரா. நாராயணன், இராசு, அருணாசலம், போ. பொன்னு, சின்னகிருட்டிணன், முனியாண்டி ஆகியோரை விழாக் குழுவினராக நியமித்தும், அன்று காலை 9 மணி அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரி

30—8—56 மாலை 4½ மணிக்கு, மேற்படி கல்லூரிப் பழைய மாணவர் சங்க உறுப்பினர் பொதுக் கூட்டம் கல்லூரிக் கட்டிடத்தில் திரு. பி. தங்கராசன் தலைமையில் நடைபெற்றது. திரு. என். காளீசுவரனைத் தலைவராகக் கொண்ட அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பிறப்பு

16—8—56ல், தர்மபுரி தோழர் சு. தியாகராசன் அவர்கள் துணைவியார் தோழியர் சரோசா ஒரு பெண் மகவுக்குத் தாயானார்; 29—8—56ல் தோழர் த. குட்டியப்பன் தலைமையில் நடைபெற்ற பெயர் சூட்டு விழாவில் தோழர்கள் து. சென்னியப்பன், பி. குப்புசாமி, த. ம. சண்முகம் ஆகியோர் பேசினர். குழந்தைக்கு 'முல்லை' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி - பொறுப்பாளர்.

* * *

18—8—56 காலை 9 மணிக்கு, இசைமுரசு தோழர் நாகூர் அனீபா அவர்களது துணைவியார் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

* * *

'நம் நாடு' அலுவலகத் தோழர் என். வி. மதிவண்ணன் அவர்களின் சகோதரியார் தோழியர் சரோசா — இராமசுப்பிரமணியம் அவர்கள் 4-9-56ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

* * *

திருவள்ளூர் தோழர் டி. வி. வரதன் அவர்களின் துணைவியார் 18-8-56ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

* * *

சேவூர் (வ. ஆ) தி. மு. கழகத் தோழர் எம் புட்பநாதன் துணைவியார் 20-8-56ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

* * *

கட்டிமேடு தி. மு. கழகத் தோழர் ப. வீராசாமி அவர்களின் துணைவியார் 23-8-56ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

## ஆசிரியருக்குக் கடிதம் :

### சர்க்கார் பஸ் நிர்வாகம் கவனிக்குமா ?

ஐயா,

சென்னை நகரில் பஸ் மூலம் பிரயாணம் செய்வது பெரும்பாலும் ஏழை - நடுத்தர மக்களாவர்; பொதுவாகச் சென்னை நகர மக்கள்—பஸ்களில் பிரயாணம் மேற்கொள்ள அவசியத்தில் உள்ளவர்கள்—நாளொன்றுக்குச் சுமார் 2 மணி நேரம் பஸ்களுக்காகக் காத்திருப்பதிலேயே நேரத்தை வீணாக்குகின்றனர். இது எவ்வளவு தேசிய நஷ்டம் என்பதை எந்தத் துறையிலேயோ இலாப நஷ்டத்தைப் பார்க்கும் சர்க்கார் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அதிலும், சில 'ரூட்'களில் 40 நிமிடங்களுக்கு ஒரு பஸ்—30 நிமிடங்களுக்கு ஒரு பஸ் என்கிற நிலையில் வண்டிகள் விடப்படுகின்றன. இந்த வண்டிகளுக்காக 40 நிமிடம் காத்திருந்தும் பஸ் வந்த பிறகு இடம் இல்லை என்கிற காரணத்தைக் காட்டி பிரயாணிகளை ஏற்ற மறுக்கும்போது, அவர்களின் நிலை எவ்வளவு பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறதென்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் கண்டோ, அனுபவித்தோ பார்த்தால்தான் தெரியும். அப்படி இடம் இருந்தாலும், அந்த பஸ்களை நிற்க வேண்டிய இடத்தில் நிறுத்தாமல் 100, 200 கெச தூரம் தள்ளி நிறுத்துகின்றனர்—அந்த வண்டிகளை ஓட்டிவரும் பொறுப்பற்ற டிரைவர்களில் சிலர். குறிப்பிட்ட இடத்தில் காத்திருந்து, அந்த இடத்தைத் தள்ளி பஸ் நிற்பதைக் கண்டு ஓடிவந்து ஏறுவதற்குள், பஸ் நகர்ந்துவிடுகிறது! பாவம், அந்தப் பிரயாணி—பஸ் மூலம் தான் போயாக வேண்டும் என்கிற நிலையிலிருந்தால்—மற்றொரு 40 நிமிட நேரம் காத்திருக்க வேண்டும்!

இதையெல்லாம் சர்க்கார் பஸ் நிர்வாக அதிகாரிகள் கவனஞ் செலுத்தி, நேரங்கழித்து வரும் 'ரூட்'களிலாவது டிரைவர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் மக்கள் பால் அனுதாபத்துடனும் நடந்து கொள்ளும்படி எச்சரிக்கை செய்வது நல்லது. சர்க்கார் பஸ் நிர்வாகம் இதற்குச் செவிசாய்க்குமா?

'தொல்லையுறுவோன்'
சென்னை.

# கடலூரில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 7—9—56 காலை கடலூர் வந்து சேர்ந்தார்.

காலை 10 மணிக்கு, வணிக்காரன் தோட்டம் வார்டில் தி. மு. கழகக் கொடியை உயர்த்திவைத்தார். கழக நிர்வாகிகள் துணைப் பொதுச் செயலாளருக்கு கைத்தறி துண்டும் மலர் மாலையும் அணிவித்து வரவேற்றனர்.

### திருமணம் :

10-30 மணிக்கு, தி. மு. கழக உறுப்பினர் தோழர் ஏ. பி. நாகராசன் — சின்னபெண்ணு ஆகியோர் திருமணம் தோழர் ப. அருணாசலம் அவர்கள் தலைமையில் வணிக்காரன் தோட்டத்திலுள்ள மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் இளங்கோ, சாமிநாதன், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். (இத் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்)

### கழகத் திறப்பு விழா :

மாலை 5 மணிக்கு கடலூர் ஓ டி வசந்தராயன்பாளையம் வார்டில் தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டது. ஏராளமான பொது மக்கள் திரண்டிருந்தனர். முதன் முதலாக தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கிளையின் அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

### பொதுக்கூட்டம் :

மாலை 6-30 மணிக்கு தோழர் பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே இளங்கோ, சாமிநாதன், கோவிந்தராசன் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

அடுத்து தெ. ஆ. மாவட்டச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகளை விளக்கிப்பேசினார்.

இறுதியாக துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் இந்திய அரசியலார் தென்னாட்டுக்குப் புரிந்து வரும் அநீதிகளையும், தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினையையும் பொதுத் தேர்தலைக் குறித்தும் விரிவாகப் பேசினார்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

## ஜப்பானில் சூறாவளி

ஜப்பான் தென் பகுதிகளில் 97 மைல் வேகத்தில் கடும் சூறாவளி அடிக்கிறதாம்.

# நெய்வேலித் திட்டத்திற்கு முதலிடம் தரப்பட்டதற்குக் காரணம் என்ன?

## வர்த்தக அடிப்படையில் நிலக்கரி வெட்டியெடுக்கப்படுமாம்

### இரசாயன எரு, மின்சார உற்பத்தி ஆரம்பிக்கத் திட்டங்கள் உருவாகின்றன

புதுடில்லி, செப். 8— நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலையை அமுல்நடத்த இந்திய சர்க்கார் இறுதியாகத் தீர்மானித்துவிட்டனர் என்று தெரிகிறது.

அச்சுரங்கத்திற்கான பூர்வாங்கப் பரீட்சார்த்த வேலைகள் அனைத்தும் வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்தே சுரங்க வேலையை உடனடியாகத் துவக்க முடிவு செய்யப்பட்டதென்றும் இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் அனைத்தும் தொழில் நுணுக்க ஆலோசனைகளைக் கலந்தாலோசித்து இறுதி முடிவு வகுக்கப்பட்டுவிட்டதென்றும் கூறப்படுகிறது.

நெய்வேலி பிரதேசத்தில் 20 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாக மதிப்பிடப்படுகிறதாம். இந்நிலக்கரி, கடலூருக்கும்-விருத்தாசலத்திற்கு மிடையேயுள்ள பகுதிகளில் வியாபித்திருக்கிறது என்றும் இச்சுரங்கத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 350 டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படுவதுடன், 3,80,000 டன் கார்பன் கலந்த நிலக்கரிக் கட்டிகள் உற்பத்தி செய்யவேண்டுமென்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

இச்சுரங்க வேலையை உடனடியாக ஆரம்பிக்க, ரூ. 1½ கோடி பெறுமான இயந்திரங்களுக்கு கடந்த ஆகஸ்டு மாதத்திலேயே அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றிலுள்ள நிறுவனங்களுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுவிட்டன என்றும், மேலும் ரூ 2 கோடி பெறுமான விசேட நிலக்கரிச் சுரங்கச் சாதனங்கள் தருவிக்க மேற்கு ஜெர்மன் நிறுவனத்திற்கு ஆர்டர் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வர்த்தக அடிப்படையில், 1960-ம் ஆண்டு ஆரம்பத்தில் நிலக்கரிச் சுரங்கவேலை ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறதாம்; அதே சமயத்திலேயே மின்சார உற்பத்தியும் ஆரம்பிக்கலாமாம்.

நெய்வேலித் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு மின்சார நிலையம் ஒன்று உருவாக்குவதற்கான வேலைகளும் ஆரம்பமாகிவிட்டனவாம். இதற்கான மின்சார சக்தியை சென்னையிலுள்ள மின்சார 'கிரிட்' விநியோகிக்குமாம்.

இது தவிர, நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலை ஆரம்பமாகி 6 மாதங்களுக்குப் பின்னர் இங்கு இரசாயன உரத் தயாரிப்பு வேலையும்கூட ஆரம்பிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

தென்னாட்டில் நிலக்கரி பஞ்சமாக இருப்பதால் நெய்வேலித் திட்டத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் தரப்பட்டிருக்கிறதாம்!

இந்தத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 68 கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்! இதில் ஏற்கனவே ரூ. 52 கோடி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுவிட்டதாம். திட்ட முன்னேற்றத்தையும், தேவைகளையும் கவனித்து மேற்கொண்டும் பணம் செலவிடப்படலாமாம்.

# மனைவி இருக்கையில் மறுமணத்திற்கு ஆசை!

### உண்மை அறிந்த பின் ஊர்-மக்களால்துரத்தப்பட்டஇளைஞன்

மேலமண்டபம், செப். 10— திருமணம்செய்துகொண்ட மனைவி உயிருடனிருக்கையில், ஒருகன்னிப் பெண்ணை திருமணம்செய்துகொள்வதற்கென ஆவலுடன் வந்த தலக்குளத்தில் வசிக்கும் வாலிபன் ஒருவனை, சில நாட்களுக்கு முன்னர் செம்பருத்தி விளையிலுள்ள சிலர் துரத்திவிட்டதாகத் தெரிகிறது; இதுபற்றி செய்தி ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது:—

தலக்குளத்தில் வசிக்கும் சுட்டையன் என்ற வாலிபன் தன்னுடைய முதல் மனைவி இருக்கும்போது 'திருமணமாகாதவன்' என்று தன்னை கூறிக்கொண்டு, செம்பருத்திவிளையில் கோமதி என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதற்கு எல்லா ஏற்பாடுகளுடன் 'திருமணக் கோலமாக' வந்ததாகவும், கடைசியில் பெண்ணின் பெற்றோரும், பிறரும் வாலிபனின் 'உண்மை நிலைமையை' அறிந்து அங்கிருந்து அவனைத் துரத்தியதாகவும் தெரிகிறது.

# அமெரிக்க மாணவிகள் அன்பளிப்பு

### சென்னை மாநிலத்தில் காந்தி நினைவுப்பள்ளி நிறுவ உதவி

நியூயார்க், செப். 8— சென்னை மாநிலத்தில், நந்திகோத்தூர் எனுமிடத்தில் ஒரு காந்தி நினைவு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த உதவும் வகையில் சுமார் ரூ. 3,000-த்திற்கு (600 டாலர்) செக் ஒன்றை மிச்சிகன் மாகாணத்திலுள்ள ஹாலந்து நகரத்து மாணவிகள் ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கின்றனராம்!

அம்மாணவிகள் இத்தொகையைக் கால்பந்து, பாஸ்கட் பந்து போன்ற விளையாட்டுகள் நடத்தியும், நடன நிகழ்ச்சிகள் மேற்கொண்டும் திரட்டினராம்.

இம்மாணவிகள் கடந்த 6 மாத காலத்தில், இலங்கை, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், பர்மா போன்ற நாடுகளுக்குக் காய்கறி விதைகள் அடங்கப் பெற்ற சுமார் 1,20,000 பொட்டலங்கள் அனுப்பிவைத்திருக்கின்றனர் என்றும், அழகான 'பிளாஸ்டிக்' பைகளில் அவை வைக்கப்பட்டு அனுப்பப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

# பணம் பாழடிக்கப்படவில்லையாம்!

## திட்ட மந்திரி நந்தா கூறுகிறார்

புதுடில்லி, செப். 10— தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்களில் பொது மக்களின் பணம் ஏராளமாக விரயமாக்கப்படுவதாகச் சொல்லப்படுவதை மக்கள் சபையில் திட்ட மந்திரி ஜி. எல். நந்தா மறுத்துள்ளார்.

அதிகாரிகளுக்காக அளவு கடந்து செலவழிக்கப்படுவதாக நிதி ஆலோசகரோ, அல்லது பிரதம தணிக்கையாளரோ இந்திய சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்றும் அவர் கூறினார்.

ஒரிசா முன்னாள் கவர்னர் பி. எஸ். குமாரசாமி இராசா சமீபத்தில் கோவையில் பேசுகையில், 'செலவு குறைந்த கல் கிடைக்கும்போது, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்திற்கு ஏன் காங்கிரீட் உபயோகிக்கப்பட்டது?' என்று கேட்டார். கீழ் பவானி அணைக் கட்டுக்குக் கல் உபயோகிக்கப்பட்டதை அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்குத் திட்ட மந்திரி பதிலளிக்கையில் உயர்தர எஞ்சினீயர்களைக் கலந்தாலோசித்த பிறகுதான் தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தில் காங்கிரீட் உபயோகிக்கப்பட்டதென்றும், தென்னிந்தியாவில் கல் அதிகமாகக் கிடைக்கிறதேயல்லாமல் கங்கை முகத்துவாரத்தில் கல் கிடைப்பதில்லையென்றும் கூறினார்.

'திரு. குமாரசாமிஇராசா தனிப்பட்ட முறையில் அவ்வாறு பேசினாரா? அல்லது ஒரிசா கவர்னர் என்ற முறையில் பேசினாரா?' என்று உறுப்பினரொருவர்கேள்வி எழுப்பினார்.

திரு. குமாரசாமி இராசா ஆயத்தமில்லாமல் திடீரென இவ்வாறு பேசியிருப்பதாகவும், பத்திரிகைச் செய்திகளைத் தவிர அவருடைய பேச்சு எவ்விதத்திலும் பதிவு செய்யப்படவில்லையென்றும் அமைச்சர் கூறினார்.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தில் சுமார் ஆறு நிர்வாக எஞ்சினீயர்களும் ஒரு சூப்பரின்டெண்டிங் எஞ்சினீயரும் வேலை செய்து கொண்டிருந்ததை திரு. இராசா பார்த்ததாகவும், ஒரே ஒரு நிர்வாக எஞ்சினீயர்தான் கீழ் பவானி திட்டப்பொறுப்பில் இருந்ததாகவும், தாமோதர் திட்டத்தின் மதகு பகுதிக்குக்காங்கிரீட் உபயோகிக்கப்பட்டதாகவும், ஆனால் கீழ் பவானி திட்டத்தின் மதகு பகுதிக்குக் கல் உபயோகிக்கப்பட்டதென்றும், இவைகளின் காரணமாக திரு. குமாரசாமி இராசா மேற்கண்ட முடிவுக்கு வந்திருக்கக் கூடுமென்றும் அமைச்சர் கூறினார்.

### சொற்பயிற்சிக் கூட்டம்

12-9-56 மாலை 7 மணியளவில், கிளைக் கழகப் பணிமனையில் தோழர் மு. மா. முத்து தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். 'தேர்தலில் நாம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

12-9-56 மாலை 6-30 மணிக்கு, சென்னை—இராயபுரம் மனமரத் தொட்டி சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில் தோழர் அன்பானந்தன் தலைமையில் 'நாகரீகம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

### திருக்குறள் வகுப்பு

12-9-56 மாலை 6 மணிக்கு. சென்னை—புரசைவாக்கம், வெள்ளாளத் தெரு, எண் 100, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர், க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

### இன்பச் செலவு

சென்னை ஆசிரியர் கல்லூரி தமிழாசிரியப் பயிற்சி மாணவர்கள், 11-9-56 இரவு 9 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டு, 16-956 முடிய 5 நாட்கள் மைசூர் மாநிலத்திலுள்ள பெங்களூர், சிவசமுத்திரம், மைசூர் முதலிய இடங்களைக் காணச்செல்கின்றனர். மாணவர்களுடன் திரு. கோவிந்தராசனார், திரு. கா. அப்துல் காதிர் ஆகியோர் செல்கின்றனர்.

# நிதி அமைச்சர் வழிகாட்டுவாரா?

புதுடில்லி, செப். 9— 'தேவைக்கு அதிகமாக துணிகளை உடுத்தக்கூடாது என்பதற்காக நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரி அவர்கள், மக்களுக்குத் தாம் முன்மாதிரியாக இருக்க அரை ஆடை உடுத்திக்கொண்டு வெளியே செல்வாரா?" என்று, மாநிலங்கள் சபையில் உறுப்பினர் ஒருவர் கேட்டிருக்கிறார்.

சில ரகத் துணிகள்மீது வரி விதிக்க அதிகாரம் கோரும் மசோதா ஒன்றைக் கண்டித்துப் பேசிய அந்த உறுப்பினர், "மக்கள் தாங்கள் உடுத்திக்கொண்டிருக்கும் கிழிந்த ஆடைகளை பல 'ஒட்டு'கள் போட்டுத் தைத்துப் போட்டுக் கொள்கிறார்கள்; ஆனால் அமைச்சரோ அவர்களை இன்னும் துணிகளைக் குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# பிராவிடண்ட் நிதிச் சட்டம் பரவலாகிறது

### மேலும்54,000தொழிலாளர் பயன் பெறுவராம்

புதுடில்லி, செப். 10— இம்மாதம் 30-ந் தேதியிலிருந்து மேலும் சுமார் 200 தொழிற்சாலைகளிலுள்ள 54,000 தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் நிதிச் சட்டத்தைப் பரவலாக்க இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

கனரக இரசாயனங்கள், இண்டிகோ, கருஞ்சிவப்பு சாய வேலைகள், காய்கறித் தொழில்கள், மிருகக் கொழுப்பு எண்ணெய்த் தொழில்கள் ஆகிய நான்கு தொழிற்சாலைகள் அவைகளாகும்.

1952-ம் ஆண்டு நவம்பர் 1-ந் தேதியன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தினால் நாடு முழுமையிலும், 3,600 - தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 20,00,000 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனராம்.

# 18 நாட்களில்...!

### 4 அணுகுண்டு பரிசோதனை

### ரஷ்யா நடத்தியதாகத் தகவல்

மாஸ்கோ, செப். 10— ரஷ்யா மேலும் ஒரு அணுகுண்டை வெடித்து பரிசோதனை நடத்தியதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த அணுகுண்டு சோதனை, 18 நாட்களுக்குள் நடைபெற்ற நான்காவது என்று தெரியவருகிறது.

ஒரு விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த சோதனைகள் நடத்தப்படுகின்றனவாம்.

மேலும் பல சோதனைகள் நடைபெற திட்டம் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

# ஆங்கிலம் பற்றிய கல்வி மந்திரிகள் முடிவு

## 'அரசியல் சட்டத்திற்கு முரணானதல்ல'

### இந்தி வெறியர்களின் போக்கு: தென்னாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள் கண்டனம்

ஆங்கிலம் பற்றிய கல்வி மந்திரிகள் முடிவுக்கு எதிராக இந்தி வெறியர்கள் ஓலமிட்டிருப்பதைத் தென்னாட்டுமக்கள்சபை உறுப்பினர்கள் கண்டித்திருக்கின்றனர்.

தோழர்கள் பூவராகசாமி, வி. வீராசாமி, என். ஆர். முனுசாமி, பி. இராமச்சந்திரரெட்டி ஆகிய நால்வரும், மக்கள்சபை இந்திச் சங்கத்தின் போக்கை எதிர்த்துக் கூட்டறிக்கை ஒன்று விடுத்துள்ளனர்.

"இந்தி வெறியர்கள் ஓலமிட்டிருப்பதைப் போன்று, ஆங்கிலத்தைப் பல்கலைக் கழகங்களில் போதனா மொழியாக்குவது ஒன்றும் அரசியல் சட்டத்திற்கு முரணானதல்ல" என்று அவர்கள் எடுத்துரைத்திருக்கின்றனர்.

"ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதற்கு நேரு போன்ற தலைவர்கள்கூட எடுத்துக் காட்டியிருக்கும் காரணங்களை இந்தி வெறியர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை" என்று, தென்னாட்டு உறுப்பினர்கள் இடித்துரைத்துள்ளனர்.

# கப்பலோட்டிய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அண்ணா அவர்கள் புறப்பட்டார்கள்.

வழியில் வடகரை என்னுமிடத்தில் கழகத்தோழர்கள் அண்ணா அவர்களை வரவேற்று மலர் மாலைகளை அணிவித்தனர்.

பின்னர் வ. உ. சி. மன்ற ஆண்டு விழா மேடைக்கு அண்ணா அவர்களையும், மற்ற தலைவர்களையும் மன்ற நிர்வாகிகள் அழைத்துச் சென்றனர். அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கை தட்டுதலின் மூலமும், வாழ்த்தொலி எழுப்பியும் அண்ணா அவர்களை வரவேற்றனர். ஏராளமான தாய்மார்களும் ஆண்டு விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்தனர்.

ஆண்டு விழாவிற்குப் புழல்-துரைசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் டி. சண்முகம் எம்.எல்.ஏ., ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ, என்.வி. நடராசன், தோழியர் சத்தியவாணி — முத்து ஆகியோர் வ. உ. சிதம்பரனார் ஆற்றிய அரும்பணியையும் அதனை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து செய்துவரும் விவரத்தையும் எடுத்துக் கூறினர்.

இறுதியாக, அண்ணா அவர்கள் தமது சொற்பொழிவில், "கப்பலோட்டிய வீரத் தமிழன் வ. உ. சிதம்பரனார் கோரிய சுதந்திரத்தை நாம் பெற்றிருக்கிறோமா—காங்கிரஸ் பேரால் ஆட்சி நடத்தும் காமராசர்களே இதற்குப் பதில் கூறுக," என்று முழக்கமிட்டார்கள்; வ. உ. சி. மன்றத்தினரின் அரும்பணியை மிகவும் பாராட்டினார்கள். மேலும் பல கருத்துக்களைத் தமது சொற்பொழிவில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டு விழாவின் வாயிலாக செங்குன்றம் மக்களிடையே உருவாகிவந்திருக்கும் உணர்ச்சி மிக்க எழுச்சி நன்கு எடுத்துக்காட்டிற்றென்று கூறின் மிகையாகாது.

அண்ணா அவர்களுக்கும் மற்ற தலைவர்களுக்கும், வ. உ. சி. மன்றம், செங்குன்றம் தி. மு. கழகம், வடகரை தி. மு. க., பொன்னேரி தி. மு. க., செங்குன்றம் மோட்டார் தொழிலாளர்கள், நந்தியம்பாக்கம், அழிஞ்சிவாக்கம் கிளைகள், பாலவயல் வள்ளுவர் வாசகசாலை, திருவள்ளுவர் மன்றம், புழல் தி. மு. க., மாதவரம் தி. மு. க. மற்றும் பல நிறுவனங்களின் சார்பில் மலர்மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

இவ்வித சிறப்புடனும் வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டு விழாவும் செங்குன்றம் ஊராண்மைக் கழக வரவேற்பு நிகழ்ச்சிகளும் இனிது முடிவுற்றன.

# ரூ. 5 கோடி செலவில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கான மருத்துவ வசதி, சுகாதார உதவி ஆகியவைகளுக்கு மேற்படி நிர்வாகம், 1956-57-ம் ஆண்டுக்காலத்தில் ரூ. 4,32,48,000 செலவழிக்க உத்தேசித்திருக்கிறதாம்.

இது தவிர, புதிய மருத்துவ மனைகளும் மருந்துச் சாலைகளும் திறக்கவும், இப்போது இருந்து வருகிற அத்தகைய மனைகளின் அபிவிருத்திக்கும் மேற்கொண்டு ரூ. 73,13,000 செலவிடவும் முடிவு செய்திருக்கிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் பிழை இரீ அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.